புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜூன் 15, 2023 • புரட்சி 23 • முழக்கம் 22 • விலை ரூ.3.00

# ஆதினங்களின் பல்லக்கு சவாரியை தடை செய்

## மயிலாடுதுறையில் கழகம் - தோழமை அமைப்புகள் ஆர்ப்பாட்டம், கைது






சைவத்தையும் தமிழையும் பரப்புவதற்காக சைவ மதங்கள் உருவாக்கப்பட்டன என்று கூறப்படுகிறது. ஆனால் ஆதீனங்கள் இன்றைக்கு அந்த பணியை விட்டுவிட்டு இந்துத்துவாவின் தூதர்களாக மாறிப் போய் இருக்கிறார்கள். மோடிக்கு நாடாளுமன்ற திறப்பு விழாவின்போது நேரு சென்று செங்கோல் ஒன்றை ஆதீனங்கள் பரிசாக அளித்து இருக்கின்றன. அந்த செங்கோல் மவுண்ட் பேட்டன் பிரபுவிடம் இந்தியாவில் ஆட்சி மாற்றத்திற்கு அடையாளமாக தரப்பட்டது என்று ஒன்றிய ஆட்சியும், அமித்ஷாவும் கட்டிவிட்ட கற்பனைகளை திருவாடுதுறை ஆதீனம் இந்து நாளேட்டில் அளித்த பேட்டியில் மறுத்துவிட்டார். அப்படி எந்த ஆதாரமும் இல்லை என்றும், எதற்காக மவுண்ட் பேட்டனிடம் போய் செங்கோலை கொடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டிருக்கிறார். ஆக பாஜகவின் பொய்யான கதை வசனம் கிழிந்து தொங்கி இருக்கிறது. இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

இந்த மடாதிபதிகள் மோடியின் ஆட்சி தான் இந்த காலம் முழுவதும் நீடித்திருக்க வேண்டும் என்று அரசியலும் பேசி இந்துத்துவாவின் பரப்புரையாளர்களாக மாறிப்போய் இருப்பதோடு தருமபுரம் ஆதீனம் பட்டினப் பிரவேசம் என்ற தன்னை பல்லக்கில் வைத்து சுமக்கின்ற ஒரு நிகழ்ச்சியை கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்திக் கொண்டிருக்கிறார். இதற்கு முன்பு அந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டு இருந்தது. பல்லக்கில் ஆதீனம் உட்கார்ந்திருப்பார், அவரை தோளில் சுமந்து மனிதர்கள் தெருத்தெருவாக போக வேண்டும். மனிதனை மனிதர்கள் சுமக்கின்ற இந்த இழிவிற்கு பல அமைப்புகள், பிற்போக்குவாதிகள், இடதுசாரிகள் ஆதரவு தருகிறார்கள்.

ஆனால் இந்த மடாதிபதிகள் தங்களை தோளில் சுமந்த கொண்டு போக வேண்டும் எதிர்பார்ப்பது என்பது மனித உரிமைக்கு மனித சமத்துவத்திற்கு மனித சுயமரியாதைக்கு எதிரான ஒன்றாகும்.

வள்ளுவர் கூறுகிறார்,

அறுத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

ஒருவன் பல்லக்கில் அமர்ந்து கொண்டிருப்பதும், மற்றவர்கள் அவர்களை சுமந்து கொண்டிருப்பது தான் அறம் என்று ஒருபோதும் சொல்லாதீர்கள், இது திருக்குறளில் திருவள்ளுவர் எழுதி வைத்த கல்வெட்டு போன்ற மனித உரிமை சாசனம்.

தமிழைப் பரப்புகின்ற சைவ மடாதிபதிகள் குறைந்தது பல்லக்கு சவாரியை தவிர்க்க வேண்டாமா?

தருமபுரம் மடத்தின் ஆதீனம் நடத்தும் மனிதனை மனிதனே பல்லக்கில் தூக்கும் இழிவான நடவடிக்கையை, மனித உரிமை மீறலை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் (10.6.23) சனி மாலை 6.00 மணியளவில் மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி அருகில் அனைத்து கட்சிகளின் சார்பாக நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட செயலாளர் மகேஷ் தலைமை தாங்கினார்.

போராட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, திராவிடர் விடுதலைக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம், தமிழர் உரிமை இயக்கம், தமிழர் தேசிய முன்னணி, தமிழ் மண் தன்னுரிமை இயக்கம். ஆகிய கட்சிகளை சேர்ந்த ஏராளமானோர் போராட்டத்தில் பங்கேற்று முழக்கங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் P.சீனிவாசன், தமிழ்நாடு விவசாய சங்கத்தின் இணை செயலாளர் S.துரைராஜ், தமிழ்மண் தன்னுரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் செயராமன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் AITUC யின் மாவட்ட செயலாளர் ராமர், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மண்டல தலைவர் வழக்குரைஞர் வேலு.குணவேந்தன், தமிழர் உரிமை இயக்கத்தின் இணை அமைப்பாளர் சந்திரசேகர், தமிழர் தேசிய முன்னணியின் மாவட்ட தலைவர் இரா.முரளிதரன் உள்ளிட்டோர் ஆதீனத்தின் போக்கை கண்டித்து உரையாற்றினார்கள்.

தமிழக அரசு தருமபுரம் ஆதீனம் கடைப்பிடித்து வரும் மனித உரிமை மீறலை தடை செய்ய வேண்டும் என்றும் தர்மபுரம் ஆதீனம் வசம் உள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பறிமுதல் செய்து மக்களிடம் வழங்க வேண்டும் என்றும், ஆதீனத்தின் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதற்கு பதிலாக ஆர்.எஸ்.எஸ் கடைப்பிடித்து வரும் சனாதன கொள்கையை அமல்படுத்தும் விதமாக நடந்து கொள்கின்றது என்றும் கண்டன உரையாற்றினார். 50 தோழர்கள் கைது செய்யப்பட்டு மயிலாடுதுறையில் இருந்து சுமார் 10 கிமீ தூரம் உள்ள குத்தாலம் திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டு நள்ளிரவு இரண்டு மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

**இந்தியாவின் அடுத்தப் பிரதமராக தமிழர் வர வேண்டும் - அமித்ஷா**

**அதுக்கு சீமானின் சம்மதத்தை வாங்கிட்டிங்களா ஜீ!**

### தலையங்கம்

## பட்டியல் தயாரிப்புப் பணியைத் தொடங்கி விட்டீர்களா?

கழக செயல் வீரர்களே கிராமங்களில் நிலவும் தீண்டாமை சக மனிதர்களின் சுயமரியாதையை பறித்து இழிவுபடுத்தும் அவலங்களை கணக்கெடுக்கும் பட்டியல் தயாரிக்கும் பணியை தொடங்கி விட்டீர்களா?

சேலம் மாநாட்டில் நாம் உருவாக்கிய செயல்திட்டத்தை நாம் விரைவு படுத்த வேண்டும் வேறு எந்த அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் செய்ய முன்வராத இந்த எதிர்நீச்சல் போடும் சமுதாயக் கடமையை நாம் சுமந்து களம் இறங்கி உள்ளோம்.

கிராமங்களில் அரசியல் சட்டங்கள் ஆட்சி செய்யவில்லை, மாறாக உள்ளூர் சாதி ஆதிக்கவாதிகள் தங்களின் சாதிவெறியை பழக்கவழக்கம், பண்பாடு என்ற பெயரில் விளிம்பு நிலை மக்கள் மீது திணிக்கிறார்கள். பார்ப்பனியத்தின் அடிமைகளாகி ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்து கோரத் தாண்டவம் ஆடுகிறார்கள்.

கோயிலுக்குள் தீண்டாமை, பொது வீதிகளில் நடப்பதற்கு தடை, தேநீர்க் கடைகளில் இரட்டைக் குவளை, முடி வெட்டும் கடைகளில் தீண்டாமை, திருவிழாக்களில் பங்கேற்பதற்கு தடை, சுடுகாட்டில் சடலங்களை புதைக்கவும் தடை, மரணத்திற்குப் பிறகும் தீண்டாமை துரத்திக் கொண்டே இருக்கிறது. காதல் திருமணம் புரிந்தால் சாதி, சமூகம், ஊர் புறக்கணிப்பு செய்கிறது. அதிகார வர்க்கம் காவல்துறை சாதிய மனப்பான்மையோடு சாதி வெறியர்களுடன் கைகோர்த்து நிற்கிறது. நேர்மையான அதிகாரிகள் ஒரு சிலரை தேடிப் பிடிக்க வேண்டி இருக்கிறது.

தோழர்களே! சட்டங்களால் சாதி தீண்டாமையை ஒருபோதும் ஒழித்து விட முடியாது என்பது நமக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் பெரியார் சமூக களத்தில் தனது போராட்டங்களை நடத்தினார். அதிர்ச்சி தரும் போராட்ட வடிவங்களை கையில் எடுத்தார்.

நவீன அறிவியல் சமூகத்திலும் ஒடுக்கப்பட்ட மக்கள் உயர்கல்வி பெற்றும் சாதி வெறியர்கள் சக மனிதர்களாக ஏற்க மறுக்கிறார்கள். சாதி ஒழிப்பு போராட்டங்கள் அண்மைக்காலமாக தொய்வடைந்த நிலையில் சாதிவெறியாட்டம் மீண்டும் தீவிரமாகிவிட்டது என்ற உண்மையை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். சாதி ஒழிப்பு இயக்கங்கள் முனைப்போடு களமிறங்கும் வரலாற்றுத் தேவை நம் முன் நிற்கிறது.

தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் என அனைத்து பிரிவிலிருந்தும் ஜாதி எதிர்ப்பாளர்கள் கரம் கோர்த்து போராடும் போது தான் இந்த சாதிய சமூகத்தை ஓரளவு அசைத்துக் காட்ட முடியும். சாதி மறுப்பு அடையாளங்களோடு களமாடும் வாய்ப்பு நம்மைப் போன்ற பெரியார் இயக்கங்களிடம் தான் தங்கி இருக்கிறது என்பது நிதர்சனமான உண்மை.

நூறாண்டு கண்ட வைக்கம் போராட்டத்தின் வெற்றி விழா நடத்தி பெரியாரின் பங்களிப்பையும் தியாகத்தையும் நம்மால் பேசிக் கொண்டிருக்க முடியும். அத்தகைய வரலாறு பெருமை கொண்டது. ஆனாலும் நாம் கொண்டாட்ட மகிழ்வில் மூழ்கிவிடாமல் பெரியாருக்கு நாம் செலுத்தும் உண்மையான பெருமையும் புகழும் காலம் முழுவதும் பேசிய ஜாதி தீண்டாமை ஒழிப்பை முன்னெடுப்பது தான் என்று களமிறங்கி இருக்கிறோம். இந்த இயக்கத்திற்கு நாம் சூட்டியுள்ள பெயர் வைக்கம் போர் முடியவில்லை. இப்படி ஒரு துணிவான முடிவை எடுக்கும் வல்லமை நம்முடைய திராவிடர் விடுதலைக் கழகத்திற்குத் தான் உண்டு. இந்த இயக்கத்தில் நமது பங்களிப்பு என்றென்றும் வரலாறாக பதிந்து நிற்கும், நமது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றும்.

தோழர்களே! விரைந்து களமிறங்குங்கள். இம்மாத இறுதிக்குள் பட்டியல் தயாரிப்புப் பணிகளை நிறைவு செய்து கழகத் தலைமைக்கு அனுப்பி வையுங்கள். சுயமரியாதை இயக்க வழி வந்தவர்கள் நாம். சக மனிதர்களின் சுயமரியாதைக்கு களம் அமைப்போம். இறுகிப் போய் கிடக்கும் சாதித் தீண்டாமை சமூகத்தை அசைக்க வைப்போம். தோழர்களே தயாராவீர்!

### குஜராத் நீதிபதியின் ”மனுஸ்மிருதி” தீர்ப்பு

## மக்கள் சிவில் உரிமைக் கழகம் கண்டனம்

*அகமதாபாத்:* *பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட சிறுமியின் கருக்கலைப்பு வழக்கில் ‘மனுஸ்மிருதி’யை மேற்கொள் காட்டி குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி கருத்து தெரிவித்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.*

*பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 17 வயது சிறுமி 7 மாத கர்ப்பமாக உள்ள நிலையில், கருக்கலைப்புக்கு அனுமதி கோரி சிறுமியின் தந்தை குஜராத் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். மனுவை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி சமிர் தாவே, கருக்கலைப்பு தொடர்பாக முடிவு எடுக்கும் முன் சிறுமி மற்றும் அவரது வயிற்றில் வளரும் குழந்தையின் ஆரோக்கியம் குறித்து பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று ராஜ்கோட் மருத்துவமனைக்கு உத்தரவிட்டார்.*

*மருத்துவ நிபுணர்கள் குழு வரும் 15-ம் தேதிக்குள் இது குறித்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்ட நீதிபதி, அந்த அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும் என கூறியுள்ளார்.*

*இந்த உத்தரவின்போது சில கருத்துக்களை நீதிபதி சமிர் தாவே தெரிவித்தார். “சமஸ்கிருதத்தில் உள்ள சட்ட புத்தகமான மனுஸ்மிருதியில் 14 - 15 வயதில் பெண்களுக்கு திருமணம் நடப்பதும், 17 வயதுக்குள் அவர்கள் தாயாவதும் வழக்கமானதுதான் என அதில் கூறப்பட்டுள்ளது. அதை நீங்கள் படியுங்கள். தாய் மற்றும் குழந்தையின் ஆரோக்கியம் நன்றாக இல்லாவிட்டால் மட்டுமே கருக்கலைப்புக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கும். இருவரும் ஆரோக்கியமாக இருப்பது தெரியவந்தால் அனுமதி வழங்கப்பட மாட்டாது.*

*ஒருவேளை கருக்கலைப்புக்கு நீதிமன்றம் அனுமதி வழங்காவிட்டால் என்ன செய்வது என்பது குறித்து இப்போதே யோசியுங்கள். குழந்தையை நீங்களே வளர்ப்பதா அல்லது இதற்கென்று அரசு சார்பில் காப்பகம் உள்ளதா என்று விசாரித்து அதில் சேர்ப்பதா என்பது குறித்து முடிவெடுங்கள்” என நீதிபதி தெரிவித்தார். நீதிபதியின் இந்தக் கருத்து சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.*

*நீதிபதியின் தீர்ப்புக்கு மக்கள் சிவில் உரிமைக் கழகம் (PUCL) கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலையிட்டு தவறான தீர்ப்பை சரி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளதோடு குஜராத் ஆளுநர் ஆச்சாரியா தேவ் வீரத் அவர்களிடமும் புகார் செய்துள்ளது. பெண்கள் உரிமைகளை நசுக்கும் மனுஸ்மிருதியை நீதிமன்றம் ஆதரிப்பது நீதித்துறையின் மீதே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறியிருக்கிறது.*

## வினா – விடை

*தமிழ்நாட்டில் 25 தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் - அமித்ஷா*

***அமலாக்கத்துறை, வருமானவரித்துறைக்கு எல்லாம் தொகுதிகளை கைப்பற்றும் உரிமை இல்லை ஜீ***

*மதுரை ஆதீனம் பல்லக்கில் மனிதர்கள் சுமக்க பட்டினப் பிரவேசம் - செய்தி*

***டெல்லிக்கு விமான சவாரி, உள்ளூரில் பல்லக்கு சவாரி***

*கர்பிணிப் பெண்கள் இராமயணமும் மகாபாரதமும் படித்தால் சுகப்பிரசவம் நடக்கும் - தமிழிசை*

***உண்மைதான், குந்திதேவி சூரியனோடு உறவு கொண்டு கர்ணனை பெற்றவளாயிற்றே!***

## மதம் எனும் சமுதாயக் கொள்கை



மதம் இல்லாமல் மக்கள் வாழ முடியாது. அதாவது நான் சொல்லும் மதம், கடவுளுக்கும் மக்களுக்கும், சம்பந்தமும் மோட்சமும் விதியும் மன்னிப்பும் சமாதானமும் மேல் லோகத்தில் அளிப்பது என்கிற மதம் அல்ல. மற்றெதுவென்றால், மனிதனுக்கு மனிதன் மரியாதையாய், (பணிவாய்) அன்பாய், ஒற்றுமையாய், ஒழுக்கமாய், உதவியாய், வாழும் கொள்கை என்று சொல்ல எனக்கு இஷ்டம். இதை நீங்கள் மதம் என்று சொல்ல வேண்டும் என்றாலும் ஆட்சேபிக்கவில்லை. இப்படிப்பட்ட மதம் இல்லாமல் மனிதன் சமுதாயத்தில் வாழ்வது சங்கடமாகும்.

பெரியார்

# கலைஞர் 100.. வரலாற்றுப் பக்கங்களில் இருந்து



திராவிடர் இயக்க வரலாற்றோடு கலைஞர் வரலாறும் இணைந்தே பயணிக்கிறது. இளைய தலைமுறையின் புரிதலுக்காக அந்த வரலாற்றின் சுருக்கமான தொகுப்பை பெரியார் முழக்கம் பதிவு செய்கிறது.

1. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தொடங்கிய 1924 இல் பிறந்த கலைஞர், சுதந்திரம் பெறுவதற்கு 9 ஆண்டு காலத்திற்குப் முன்பு தனது அரசியல் பயணத்தை தொடங்கினார். அந்த பயணம் 80 ஆண்டு காலம் 2018 வரை நீடித்தது.

2. ஐந்து முறை தமிழக முதல்வராக இருந்தார். அதில் இரண்டு முறை சட்ட விரோத குறுக்கு வழிகளால் பதவிக்காலம் முடிவதற்கு முன்பே ஒன்றிய ஆட்சியால் அவரது ஆட்சி கலைக்கப்பட்டது.

3. அறுபது ஆண்டு காலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர், போட்டியிட்ட ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றி பெற்றார்.

4. நான்கு வயதில் தந்தை விருப்பப்படி இசைப் பயிற்சிக்கு சென்றார் கலைஞர். கோயில்களில் தான் இசைப் பயிற்சி நடக்கும், கோயில்கள் பெரிய மனிதர், உயர் சாதியினர் வரும் இடம் என்பதால் மேல் சட்டை அணியும் உரிமை, காலில் செருப்பு போடும் உரிமை மறுக்கப்பட்டன. சாதியின் அடிப்படையில் மனிதர்கள் ஒதுக்கப்படுவதை இளம் வயதிலேயே அறிந்த கலைஞர் பிறகு தனது இசை வகுப்புகளே எனக்கு முதல் அரசியல் வகுப்பானது என்று கூறினார்.

5. 1935இல் ஐந்தாம் வகுப்பில் சேர்வதற்கு திருவாரூருக்கு வந்த கலைஞருக்கு பல தடைகள், நுழைவுத் தேர்வு என்ற அந்த காலத்து நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற வேண்டும். அப்படியும் தேர்ச்சி பெற்ற அவர் கஸ்தூரி ஐயங்கார் நடத்திய பள்ளியில் சேர சென்ற போது ஐயங்கார் அவரை சேர்க்க மறுத்து விட்டார். கண்ணீர் விட்ட கலைஞர் அவமானத்துடன் ஊர் திரும்ப முடியாது என்று கருதி கோயில் குளத்தில் மூழ்கி இறக்கப் போகிறேன் என்று கூறவே அதற்குப் பிறகு ஐயங்காரே இறங்கி வந்து ஐந்தாம் வகுப்பில் சேர்க்க அனுமதித்தார்.

6. ஐந்தாம் வகுப்பு சேர்ந்த போது பாடநூலில் நீதிக்கட்சித் தலைவர் பாடங்கள் அரசு வரலாற்று நூலில் இடம்பெற்றிருந்தது. அதை படித்த போது நீதிக்கட்சி முன்வைத்த பார்ப்பனரல்லாதார் அரசியலின் நியாயத்தை உணர்ந்தார்.

7. 1937இல் காங்கிரஸ் கட்சியில் முதல்வராக வந்த ராஜகோபாலாச்சாரி இந்தியை கட்டாயப் பாடமாக்கினார். பட்டுக்கோட்டை அழகிரி பேச்சுகளால் உந்தப்பட்ட கலைஞர் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் குதித்தார், திருவாரூரில் பள்ளி மாணவர்களை ஒருங்கிணைத்து போராட்டக்களத்தை அமைத்தார்.

8. ஒரு பள்ளியில் நடந்த பேச்சு போட்டியில் அவரது முதல் பேச்சு தொடங்கியது. இந்து புராண கதாபாத்திரங்களில் அசுரர்கள் என்று எழுதப்பட்டவர்களின் உயர்ந்த மாண்புகளை உள்ளடக்கியதாக அந்த பேச்சு இருந்தது. கர்ணனுக்கும் துரியோதனனுக்கும் உள்ள நட்பின் ஆழத்தையும் விவரித்தார், இந்த பேச்சை தயாரிக்க ஒரு வாரம் முழுவதும் செலவிட்டார். தனது பேச்சை அனைவரும் விவாதிக்க வேண்டும் என்ற உறுதியோடு அதை அவர் தயாரித்தார்.

9. நண்பர்களுடன் சேர்ந்து மாணவர் நேசன் என்ற கையெழுத்து பத்திரிக்கையை தொடங்கினார் . 50 பிரதிகளையும் கைகளால் எழுத வேண்டும், அதை சுயமரியாதை இயக்கத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்தார். அப்போது அவர் 15 வயது மாணவன்.

10. 1942 இல் முரசொலி மாத இதழைத் தொடங்கினார். 1944 இல் சிதம்பரத்தில் பார்ப்பனர்கள் வர்ணாசிரம மாநாடு ஒன்றை நடத்தினார்கள், அந்த மாநாட்டை எதிர்த்து முரசொலியில் எழுதிய கலைஞர் வர்ணாசிரம மரண குறிப்பையும் எழுதினார்.

11. காஞ்சிபுரத்திலிருந்து வெளிவந்த அண்ணாவின் திராவிட நாடு ஏட்டுக்கு "இளைஞர்களின் தியாகம்" என்ற கட்டுரையை அனுப்பினார். அண்ணா அதை வெளியிட கலைஞர் உற்சாகமானார் .

12. பள்ளி இறுதி வகுப்பின் மூன்று முறை தோல்வியடைந்த கலைஞர், பெற்றோருக்கு பயந்து வீட்டை விட்டு வெளியேறினார். நாகையில் திராவிடர் கழக பிரமுகர் ஆர்.வி.கோபால் திராவிட நாடக குழு ஒன்றை தொடங்கியிருந்தார். கலைஞர் எழுதிய பழனியப்பன் நாடகத்தை 100 ரூபாய் விலை கொடுத்து கோபால் வாங்கிக் கொண்டார்.

13. கலைஞருக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்த பெற்றோர்கள் பிரபல பின்னணி பாடகர் சிதம்பரம் ஜெயராமன் சகோதரி பத்மாவை திருமணம் செய்ய முன்வந்தனர். கட்டாயத்திற்காக கலைஞர் சம்மதித்தார். தனது திருமணம் சீர்திருத்த திருமணமாக நடக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். சிதம்பரம் ஜெயராமனுக்கும் அதே நாளில் திருமணம் நடத்த முடிவானது, அது வைதீகத் திருமணம். ஒரே மேடையில் சீர்திருத்த திருமணமும் வைதீகத் திருமணமும் நடந்தது. நாவலர் நெடுஞ்செழியன், அவரது சகோதரர் செழியன் அவர்களது சொந்த கிராமத்தில் இருந்து திருவாரூருக்கு நடந்தே வந்தார்கள். மாலை நடந்த வரவேற்பில் என்.எஸ்.கிருஷ்ணன் நந்தன் சரித்திரத்தை கதை உரையாடலாக நடத்தினார். அப்போது என்.எஸ்.கிருஷ்ணன் திரை உலகில் பிரபலமாக இருந்தார் அவரை பார்க்க பெரும் கூட்டம் கூடிவிட்டது, தள்ளுமுள்ளு உருவாக்கி விட்டது.

14. கலைஞர் இளம் வயதில் முதன்முதலாக எழுதிய நாடகம் சாந்தா பிறகு பழனியப்பன் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் நாடகத்துக்கு கூட்டம் சேரவில்லை, வறுமையில் வாடியது நாடகக் குழு தோல்விக்கு காரணம் திராவிட என்ற சொல் தான் திராவிட நாடக குழு என்று அந்த குழுவுக்கு பெயர் சூட்டப்பட்டது. அக்காலத்தில் திராவிட என்ற சொல் தீண்டப்படாத தலித் மக்களை குறிப்பதாகவே இருந்ததால் தலித் அல்லாதவர்களின் எதிர்ப்பை அந்த நாடகக் குழு சந்திக்க வேண்டி இருந்தது.

15. திராவிடர் கழகம் பெரியார் தலைமையில் பாண்டிச்சேரியில் ஒரு மாநாட்டை நடத்தியது. அமைப்பாளர்களின் கலைஞரும் ஒருவர் அண்ணா உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர் மாநாட்டை நடக்க விடாமல் காங்கிரஸ்காரர்கள் கலவரத்தில் இறங்கினார்கள். முன்னணி தலைவர்கள் பாரதிதாசன், கலைஞர் ஆகியோர் பத்திரமாக தலைவர்களை மீட்டு வேறு இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். கலவரக்காரர்களின் கையிலேயே கலைஞர் சிக்கிக்கொண்டு கொடூரமாக தாக்கப்பட்டு சாக்கடையில் வீசப்பட்டார். அவர் இறந்து விட்டதாகவே கருதி கூட்டம் வெளியேறியது. மாலை எதிர்ப்புகளையும் மீறி மீண்டும் மாநாடு கூடியது அப்போது தான் கலைஞரை பெரியார் தன்னுடன் ஈரோட்டுக்கு அழைத்துச் சென்று குடி அரசு பத்திரிக்கையில் பணியாற்ற வைத்தார்.

16. 1947 இல் கலைஞர் எழுதிய தூக்கு மேடை நாடகத்தை தஞ்சையில் நடிகவேள் எம்.ஆர்.ராதா அரங்கேற்றினார். கலைஞரும் நாடகத்தில் நடித்தார், நாடகத் தலைவர் பட்டுக்கோட்டை அழகிரி தூக்கு மேடையில் இருந்து கதாநாயகன் பேசும் வசனங்கள் திராவிடர் கழகத்தின் சமூக புரட்சி கொள்கைகளை மட்டுமல்ல, பகத்சிங் வாழ்வும் மரணம் கூட பேசப்பட்டது. கருணாநிதிக்கு கலைஞர் என்ற பட்டத்தை இந்த நாடக மேடையில் தான் பட்டுக்கோட்டை அழகிரி சூட்டினார்.

17. திராவிட இயக்க எழுத்தாளர்களின் எழுத்து வலிமையைக் கண்டு – நடுங்கிப் போன காங்கிரஸ் ஆட்சி – பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் சட்டங்களைக் கொண்டு பல நூல்களை தடை செய்தது. கலைஞரின் தூக்கு மேடை நாடகமும் அதில் ஒன்று. 1) அண்ணாவின் இலட்சிய வரலாறு, 2) புரட்சிக் கவிஞரின் இரணியன் அல்லது இணையற்ற வீரன், 3) ஏவிபி.ஆசைத் தம்பியின் காந்தியார் சாந்தி அடைய, 4) புலவர் குழந்தையின் இராவண காவியம், 5) புலவர் செல்வராஜின் கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா? ஆகியவை தடை செய்யப்பட்ட நூல்களில் சில.

17. கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தனது மணமகள் திரைப்படத்திற்கு கதை வசனம் எழுத கலைஞரை சேலத்தில் இருந்து சென்னைக்கு அழைத்து வந்தார். அவரது வீட்டில் தான் கலைஞர் வசனங்களை எழுதினார், அப்போது காவி உடையில் நெற்றியில் விபூதி பூசிய ஒருவரை கலைவாணர் கலைஞரிடம் அறிமுகப்படுத்தினார். அவர் தான் பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த ஜீவா என்று அழைக்கப்பட்ட ஜீவானந்தம். கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட காலம் அது, அவருக்கு தடை நீக்கப்படும் வரை அடைக்கலம் கொடுத்தவர் என்.எஸ்.கிருஷ்ணன். கலைஞருக்கு முதலில் கார் வாங்கி கொடுத்தவரும் என்.எஸ். கிருஷ்ணன் தான்.

தொகுப்பு : க.இராசேந்திரன்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# அமித்ஷாவுக்கு டி.ஆர்.பாலு பதிலடி

# ஒன்றிய ஆட்சியால் புறக்கணிக்கப்படும் தமிழ்நாடு

*ஒன்பது ஆண்டுகால பாஜக ஆட்சியில் தமிழ்நாட்டிற்கு ஒரு சிறப்புத் திட்டம் கூட அளிக்கவில்லை என அமித் ஷா ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருப்பதாக திமுக எம்.பி டி.ஆர்.பாலு பதிலடி கொடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-* தமிழ்நாடு முதலமைச்சர் கேட்ட கேள்விக்கு ஆக்கப்பூர்வமாக பதில் சொல்ல முடியாத ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, முழுக்க முழுக்க கற்பனைக் கதையை உருவாக்கி, தமிழ்நாட்டிற்குப் பல திட்டங்களை அள்ளி வீசியது போல் “கானல் நீர்” தோற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்திருக்கிறார். தமிழ்நாடு, பாஜக ஆட்சியில் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பது அக்மார்க் உண்மை என்பதை அமித்ஷாவே புரிந்து கொண்டு, திசை திருப்பி தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றலாம் என நினைக்கிறார். ஐக்கிய முற்போக்குக் கூட்ட ணியில் திமுக பங்கேற்றிருந்த போது தமிழ்நாட்டிற்கு சாதித்த திட்டங்களை மிக அழகாக பட்டியலிட்டார் முதலமைச்சர். அதுபோன்ற சாதனை மிக்க சிறப்புத் திட்டங்கள் ஒன்று கூட இந்த 9 ஆண்டுகால பாஜக ஆட்சி யில் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு கொடுக்கவில்லை என்பதுதான் எங்கள் அடிப்படையான குற்றச்சாட்டு. தன்னுடைய பேச்சில் அப்படி யொரு சிறப்புத் திட்டத்தை சுட்டிக் காட்ட முடியாமல் திணறிப் போன உள்துறை அமைச்சர், வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ எனப் பேசி, “தமிழ்நாட்டிற்கு பாஜக ஆட்சியில் ஒரு சிறப்புத் திட்டமும் நிறைவேற்றவில்லை” என்று வேலூரில் வெளிப் படையாகப் பேசிக் கைவிரித்துள்ளார்.

உள்துறை அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ள நிதி ஒதுக்கீடுகள், மானி யங்கள், ஒன்றிய அரசு மாநில அரசுக்கு கொடுக்க வேண்டிய அரசியல் சட்டக் கடமை. அது பாஜக ஆட்சியில் இருப்பதால் வந்தது இல்லை. எந்த அரசு ஒன்றியத்தில் இருந்தா லும் அதைக் கொடுக்காமல் இருக்க முடியாது. அதிலும் குறிப்பாக ஜி.எஸ்.டி மூலம் தமிழ்நாட்டிலிருந்து அதிக வருவாய் ஒன்றியத்திற்குக் கிடைக்கும்போது கூட தமிழ்நாட்டை ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

அதற்கு பதில், தமிழ்நாட்டில் வசூலித்து உ.பி.யிலும்- பாஜக ஆளும் மாநிலங்களிலும் செலவழிப்பதுதான் பிரதமர் மோடி தலைமையிலான பாஜக ஆட்சி!

தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்கெனவே தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருக்கி றது. அதற்கும் பாஜக அரசு ஒன்றும் பங்களிப்பு செய்திடவில்லை. ஏதாவது ஒரு நெடுஞ் சாலைத் திட்டத்தைக் கொண்டு வந்தால் கூட ஆந்திரா, கர்நாடக பயன்பெற்று அதில் மீதி தமிழ்நாடு பயன்பெறும் வகையில்தான் ஒன்றிய பாஜக அரசு திட்டமிட்டதே தவிர, தமிழ்நாட்டிற்கு என்று பிரத்தியேகமாக எந்த நெடுஞ்சாலை சிறப்புத் திட்டத் தையும் அளிக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய தேசிய நெடுஞ்சாலை வழித்தடங்களை முன்பு முதலமைச்சராக இருந்த சந்திரபாபு நாயுடுவின் அழுத்தத்திற்கு பயந்து மாற்றி - தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்ததுதான் ஒன்றிய பாஜக அரசு.

தமிழ்நாட்டை எப்படி ஒன்றிய அரசு வஞ்சித்துள்ளது என்பதற்கு சில எடுத்துக்காட்டுகளை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன். ஒன்றிய வரிகளில் இருந்து தமிழ்நாட்டிற்கு நிதி ஆணையம் பகிர்ந்தளிப்பது குறைக்கப்பட் டுள்ளது பாஜக தலைமையிலான ஒன்றிய ஆட்சியில்தான்! ஒன்றிய வரி வருவாய்க்கு தமிழ்நாடு அளிப்பது 1.6 லட்சம் கோடி ரூபாய். ஆனால் அந்த ஒன்றிய வரி வரு வாயிலிருந்து தமிழ்நாட்டிற்குப் பகி ர்ந்தளிப்பது வெறும் 41 ஆயிரம் கோடி ரூபாய். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், ஒன்றிய வரி வருவாய்க்கு 100 ரூபாய் தமிழ் நாடு கொடுத்தால், பாஜக ஆட்சி தமிழ் நாட்டிற்கு 20 ரூபாய் திருப்பிக் கொடு க்கிறது. எதிர்காலத்தில் இதைவிட மோசமாக நிதி ஒதுக்குவோம் என அமித்ஷா கூறுகிறார்.

தமிழ் நாட்டிற்கு கடந்த 9 வருடத்தில் இரண்டு லட்சத்து 47 ஆயிரம் கோடி ரூபாயைப் பிரதமர் அளித்ததாக கூறும் பொழுது, அதே கால கட்டத்தில் உத்தரப்பிரதேசத்திற்கு 10 லட்சத்து 73 ஆயிரம் கோடியை அள்ளித் தந்ததை ஏன் மறைக்க வேண்டும்? நிதிப் பகிர்வில் முக்கியத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதில் தலைநகர் தில்லி தமிழ் நாட்டை வஞ்சிக்கிறது.

9 ஆண்டுகால பாஜக ஆட்சி என்பது, சென்னை மாநகரத்திற்குப் பேரிடர் மேலாண்மைக்காக நிதி ஆணையம் பரிந்துரைத்த 500 கோடி ரூபாய் நிதியை இரண்டு ஆண்டு களாக கொடுக்காத ஆட்சி. 2015-இல் அறிவிக்கப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை இதுவரை கட்டாத ஆட்சி. இதுவரை அதற்கு நிதி கூட ஒதுக்காமல் அநீதி இழைக்கும் ஆட்சி. சென்னை மெட்ரோ ரயில்-2 ம் கட்ட திட்டத்திற்கு 2019 இல் நிதி கேட்டும் இன்று வரை ஒப்புதல் வழங்காத ஆட்சி. தூத்துக்குடி துறைமுக விரி வாக்கத்திற்கான கோரிக்கையைக் கிடப்பில் போட்டு வைத்துள்ள ஆட்சி. ஒவ்வொரு நிதி நிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டின் ரயில் திட்டங்க ளுக்கு நிதி ஒதுக்காமல் புறக்கணித்த ஆட்சி. இவையெல்லாம்தான் பாஜக ஆட்சி தமிழ்நாட்டிற்கு தந்த வேதனைகள்! குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், 2023-2024 பட்ஜெட்டில் தமிழ்நாட்டு ரயில் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 2.5 விழுக்காடு. கடந்த 5 ஆண்டுகால பாஜக ஆட்சியில் ரயில் திட்டங்களுக்கு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி 18 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால் 2023-24 ஒரு நிதியாண்டில் மட்டும் உத்தரப்பிர தேசத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 17,500 கோடி ரூபாய். மாற்றாந்தாய் மனப் பான்மையோடு தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதே பாஜக ஆட்சியில்தான் என்பதற்கு இதை விட உதாரணம் தேவையில்லை. இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

## பட்டியல் தயாரிப்பு - தெருமுனைக் கூட்டங்கள் ; திருப்பூர் மாவட்டம் தீவிரம்

திருப்பூர் மாவட்ட திவிக ஆலோசனைக் கூட்டம் 12.06.2023 திங்கள் மாலை 4.30 மணி அளவில் மாஸ்கோ நகர் மாதவன் அலுவலகத்தில் நடைபெற்றது ஆலோசனைக் கூட்டம் கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன் தலைமையில் கழகப் பொருளாளர் சு.துரைசாமி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஏப்ரல் 29,30 நடைபெற்ற மாநாட்டில் திருப்பூர் மாவட்டம் சார்பாக சிறப்பாக கலந்துகொண்டு பேரணியில் இரண்டாம் இடம் பரிசு பெற்றமைக்கு பேரணியில் கலந்துகொண்ட அனைத்து தோழர்களுக்கும் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக செயலவையில் அறிவிக்கப்பட்ட படி தீண்டாமை நடக்கும் இடங்கள் கணக்கெடுப்பு மற்றும் தமிழ்நாடு முழுவதும் நடைபெற உள்ள 1000 தெருமுனை கூட்டங்களில் திருப்பூர் மாவட்டத்தில் 50 கூட்டங்கள் நடைபெற வாய்ப்புள்ள இடங்கள் குறித்தும் ஆலோசனைகள் நடைபெற்றன.

மேலும் தாராபுரத்தில் நகராட்சி அரசு அலுவலகத்திற்குள் நிர்வாண அகோரி சாமியார்களை அழைத்து வந்து பூஜை நடத்திய நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையில் புகார் அளித்திருந்தும் அதன் மீது நடவடிக்கை ஏதும் இல்லாத காரணத்தினால் மீண்டும் ஆதாரங்களுடன் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறைக்கு புகார் அளிப்பது குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

1) திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட கிராம பகுதிகளில் பல்வேறு வடிவங்களில தீண்டாமை கடைபிடிக்கப்படும் இடங்களை கண்டறிய தோழர்கள் குழுவாக செல்வது எனவும் அப்படி கண்டறிந்த இடங்களை பதிவு செய்து தலைமைக்கு அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

2) மாநில கழக செயலவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் “எது திராவிடம்? – எது சனாதனம்?” எனும் தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் நடைபெற உள்ள 1000 தெருமுனை கூட்டங்களில் திருப்பூர் மாநகர் சுற்றுப்பகுதிகளில் மட்டும் 25 இடங்கள் தெரிவு செய்து முடிவெடுக்கப்பட்டது. மேலும் உடுமலை பல்லடம் தாராபுரம் பகுதிகளில் 25 இடங்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

3) கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் முகில் இராசு, மாநகரத் தலைவர் தனபால், மாநகரச் செயலாளர் மாதவன், 15 வேலம்பாளையம் பொறுப்பாளர் மாரிமுத்து தோழர் அய்யப்பன், தமிழ்நாடு மாணவர் கழகம் மகிழவன், பெரியார் விழுது யாழிசை, யாழினி ஆகியோர் கலந்துகொண்டனர்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 16, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran